Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

06.05.2020 புதன்கிழமை

## ஏறியது ரூபா

கொழும்பு, மே 6
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த சில வாரங்களாக கடுமையாக வீழ்ச்சியினை எதிர்கொண்ட இலங்கை ரூபாவின் பெறுமதியானது படிப் 2

## ‘பார்’களை திறக்கத் தீர்மானம்

கொழும்பு, மே 6
சமூக இடைவெளியை பேணாமல் இருந்த காரணத்தால் மூடப்பட்ட அனைத்து மதுபானக் கடைகளையும் மீண்டும் திறப்பதற்கு 2

### ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

# அரசியல்வாதிகள் எவரும் உரிமை கோர முடியாது

யாழ்ப்பாணம், மே 6
தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமை காரணமாக சமூக நன்மைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பில் எந்தவொரு அரசியல் தரப்பினரும் உரிமை கோரமுடியாது. 2



## 196 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொழும்பு, மே 6
உலகளாவிய ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸால் இலங்கைக்கு வரமுடியாத நிலையில் இருந்த 196 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாடு திரும்பினர். சிறிலங்கன் ஏயார்லைன்ஸின் சிறப்பு விமானம் 2

## கோத்தா அரசுடன் ஒப்பந்தம் இல்லை

*நிரூபித்தால் பதவிவிலகல் என மஹிந்த தேசப்பிரிய சவால்*

கொழும்பு, மே 6
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசுடன் எந்த இரகசிய ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை என தேர்தல் ஆணைக் 2

### கொரோனாவால் பாதிக்கப்பட்ட

## 2ஆவது சிப்பாய் வீடு திரும்பினார்

கொழும்பு, மே 6
கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் கடந்த 23ஆம் திகதி முல்லேரியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இரண்டாவது கடற்படைச் சிப்பாய் நேற்று குணமடைந்தார். முல்லேரியா மருத்துவமனையில் இருந்து நேற்று வெளியேறிய குறித்த கடற்படைச் சிப்பாய் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மேலும் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்படுவார். (ம)



பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூட வாசல் திருத்தப்படுகின்றது

இடமாற்றப்படவுள்ள குளிரூட்டி

## பல்கலையில் பாதுகாப்பாகவே சோதனை


வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர்
பீடாதிபதி மற்றும் மருத்துவமனைப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் உலக சுகாதார நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றியே கொரோனாத் தொற்றுச் சோதனைகள் முன்னெடுக்கப் படுகின்றன. ஆய்வுகூடத்தில் எந்தவித தொற்றும் ஏற்பட 2

## சலூன்களுக்கு 6 நிபந்தனைகள்

வடக்கு சுகாதாரத் திணைக்களம் விதிப்பு

யாழ்ப்பாணம், மே 6
மூடப்பட்டிருந்த சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நீண்ட நாள்களின் பின்னர் திறக்கப்படவுள்ளதால் கொரோனாத் தொற்று ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக 6 நிபந்தனைகளை வடக்கு 2



## டெங்கு உச்சம்!

4 மாதங்களில் 18,835 பேர் பாதிப்பு!!

கொழும்பு, மே 6
கடந்த நான்கு மாதங்களில் 18 ஆயிரத்து 835 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவக்காற்று மழையைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் டெங்கு நோய் பரவும் சாத்தியம் அதிகரித்துக் காணப்படும் என்றும் சுகாதாரப் பிரிவு எச்சரித்துள்ளது. 2

## கொரோனா சாவு 259,000

வுகான், மே 6
உலக அளவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 59 ஆயிரமாக அதிகரித்தது. சீனாவின் வுகான் நகரில் 2

## 215 பேர் குணமடைவு 547 பேர் சிகிச்சையில்

*153 பேர் கண்காணிப்பில்*

கொழும்பு, மே 6
இலங்கையில் இதுவரை 771 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப் 2

## கடற்படையினரை புறக்கணிக்காதீர்!

*இராணுவத் தளபதி கோரிக்கை*

கொழும்பு, மே. 6
வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 348 சிப்பாய்கள் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் 6

## சுதந்திரக் கட்சி வேட்பாளரின் மனைவிக்கு எதிராகப் போராட்டம்

சுன்னாகத்தில் இன்று பரபரப்பு

யாழ்ப்பாணம், மே 6
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் மனைவிக்கு எதிராக சுன்னாகம் சபாபதிக் கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தமது கிராமத்தை வேட்பாளரின் மனைவி இழிவுபடுத்தியதாகக் குற்றம் சுமத்தியே பொதுமக்கள் 2

## ஏறியது...

படியாக ஏற்றம்பெற்று வருகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள இன்றைய நாணய மாற்று விகிதங்களின் படி அமெரிக்க டொலர் ஒன்றுக்கான கொள்முதல் பெறுமதி 185.81 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 191.71 ரூபாவாகவும் காணப்படுகிறது. கடந்த சில வாரங்களில் இலங்கை ரூபாவானது பெருமளவு வீழ்ச்சியை சந்தித்திருந்தது. குறிப்பாக அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி 200 இனை தாண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசியல்வாதிகள்...

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தக் கொடுப்பனவு பொது மக்களாகிய உங்களது வரிப்பணத்தில் வழங்கப்படுபவையாகும். இதற்கு எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ உரிமை கோர முடியாது. இது தொடர்பில் பொதுமக்கள் எந்த அரசியல் கட்சியுடனோ அல்லது வேட்பாளருடனோ விசேட பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. இது தொடர்பான விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகள் இருப்பின் பொதுமக்கள் தமது பிரதேச செயலகத்தையோ மாவட்டச் செயலகத்தையோ அணுக முடியும். மேலும் இந் நிவாரண நடவடிக்கைகளை கையாள்வதற்கு கிராம மட்டத்தில் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் பிரதேச மட்டத்தில் பிரதேச செயலர்களும் பொறுப்பாக இருப்பார்கள், என்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன், அரசின் உதவிகள் கிடைக்காதவர்கள் தமது அமைப்பாளர்களைத் தொடர்பு கொள்ள முடியும் என்று முகநூலில் விளம்பரப்படுத்தியிருந்தார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது. (ஓ,5)

## 196 இலங்கையர்....

மூலம் அவர்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அனைவரும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம)

## கோத்தா அரசு...

குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் மஹிந்த தேசப்பிரியவின் மகன் விதுர காஷியப்ப தேசப்பிரிய வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியதற்கு பின்னால் அரச அனுசரணை இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் அதனை மறுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளர், அப்படி செய்திருந்தால் பதவி விலகத் தயார் என்று கூறியுள்ளார். (ம)

## 'பார்'களை...

அரசாங்கம் தீர்மானித் துள்ளது. அந்தவகையில் எதிர்வரும் 15ஆம் திகதி பெரும்பாலும் அனைத்து மதுபானசாலைகளும் திறக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## கொரோனா சாவு .....

டிசெம்பர் மாதம் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகில் சுமார் 200 நாடுகளில் பரவியுள்ளது. அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெய்ன், பிரிட்டன், பிரான்ஸ், கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகள் கொரோனா வைரஸால் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த இரு வாரங்களாக ஒவ்வொரு நாளும் சராசரியாக 5,000 உயிரிழப்புக்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 59 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

## டெங்கு உச்சம்!

தற்போது இக்காலப்பகுதியில் அதிகளவானோர் வீடுகளில் இருப்பதால், டெங்கு ஆபத்துக் குறித்து அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார். அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் ஜனவரி மாதத்தில் பதிவாகியுள்ளனர் எனவும், அந்த மாதத்தில் 11 ஆயிரத்து 595 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஏப்ரல் மாதத்தில் 383 வரையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஓ,5,22)

## சலூன்களுக்கு...

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் விதித்துள்ளது.

இது தொடர்பில் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சலூன்களுக்குள் இருவருக்கிடையில் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும், முடிதிருத்துநர்கள் கட்டாயமாக முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும், முடிதிருத்துநர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்குரிய சேவையை நிறைவு செய்தபின் கைகளை சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க்காரமிட்டு கழுவிய பின்பே அடுத்த வாடிக்கையாளருக்குரிய சேவையை வழங்க வேண்டும், மொத்தமாக பணியில் உள்ள முடிதிருத்துநர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாடிக்கையாளரை உள்ளே அனுமதிக்கவும். உதாரணமாக முடிதிருத்துநர்கள் இருவர் பணியில் இருந்தால் முடிவெட்டிக் கொண்டிருப்பவர்கள் இருவரும் காத்திருப்பவர் இருவரும் என்று நான்கு வாடிக்கையாளர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கவும். கடையின் அளவு சிறிதாயின் காத்திருக்கும் வாடிக்கையாளரின் எண்ணிக்கையை மேலும் குறையுங்கள், ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பாவிக்கும் உபகரணங்கள் அனைத்தையும் ஸ்பிறிட் மூலம் அல்லது கொதிக்கும் நீரில் அமிழ்த்தி தொற்றுநீக்கம் செய்யவும். தொற்றுநீக்கம் செய்யமுடியாத உபகரணங்களைப் பாவிப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள். போர்வை, துவாய் மற்றும் பிளேட் போன்றவற்றை வழமைபோல் ஒருவருக்கு ஒன்று எனப் பாவிக்கவும். பிளேட்டை ஒருவருக்குப் பாவித்த பின் அதனை உரிய முறையில் கழிவகற்றல் செய்யவும்;. துவாய்கள் மற்றும் போர்வைகளை தோய்த்து உலர்ந்த பின்பே பாவிக்கவும் - என்றுள்ளது. (ஓ,5)

## 215 பேர்...

பட்டவர்களில் 215 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்துள்ளனர். தொற்றுக்குள்ளாகியவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 547 நோயாளிகள் 7 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு மருத்துவமனையில் 133 பேரும், வெலிகந்தை ஆதார மருத்துவமனையில் 52 பேரும், முல்லேரியா ஆதார மருத்துவமனையில் 91 பேரும், இரணவில மருத்துவமனையில் 17 பேரும், காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் 59 பேரும், வெலிசறையிலுள்ள கடற்படை மருத்துவமனையில் 135 பேரும், ஹோமாகம ஆதார மருத்துவமனையில் 60 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே மேலும் 153 பேர் 29 மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ஓ,5,22)

## பல்கலையில்....

வில்லை. ஒரு சிலர் தமது சுயநலத்துக்காக பிழையான தகவல்களை வெளிப்படுத்தி மக்களையோ, பல்கலைக்கழக ஊழியர்களையோ, மருத்துவபீட மாணவர்களையோ பயப்பீதிக்கு உள்ளாக்கக்கூடாது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதியும் சத்திரசிகிச்சை நிபுணருமான எஸ்.ரவிராஜ் ஆகியோர் தெரிவித்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும், ஆய்வுகூடத்தில் தொற்று ஏற்பட்டமை காரணமாகவே இவை நடைபெறவில்லை என்றும் சில இணையத்தளங்கள் மற்றும் ஓர் அச்சு ஊடகத்தில் செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று மதியம் இடம்பெற்றது.

பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வழமைபோன்று இன்று பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும். இரண்டு இடங்களையும் சேர்த்து ஒரு நாளில் 100 சோதனைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். சோதனைகள் மிகவும் சரியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவபீட ஆய்வுகூடத்தில் தொற்று ஏற்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. அப்படி எதுவும் இடம்பெறவில்லை, என்றார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி எஸ்.ரவிராஜ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு தினங்கள் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டிருந்தன. எமது பீடத்திலுள்ள ஆய்வுகூடத்தில் சோதனை ஆரம்பித்த சில நாள்களிலேயே நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தோம். தொற்று தொடர்பாக பரிசோதனைகள் இடம்பெறும் ஆய்வுகூடத்துக்கு, அருகிலுள்ள மாணவர் ஆய்வுகூடத்திலுள்ள குளிரூட்டிகள் இரண்டைக் கொண்டு வரவேண்டிய தேவை ஏற்பட்டது. இரண்டு குளிரூட்டிகளும் மைனஸ் 80 மற்றும் மைனஸ் 30 ஆகிய வெப்பநிலைகளில் இயங்குகின்றன. இதன் காரணமாக அந்த குளிரூட்டிகள் வெப்பமடைகின்றன. வெப்பமடைந்தால் அவற்றைத் தொடர்ந்து நீண்டகால நோக்கில் இயக்குவது கடினம். எனவே இரண்டு குளிரூட்டிகளையும், குளிரான நிலைமை காணப்படும் எமது ஆய்வுகூடத்தில் வைக்க வேண்டிய தேவை இருந்தது. ஆய்வுகூடத்துக்கான கதவின் ஊடாக அதனைக் கொண்டு செல்ல முடியாது. எனவே ஆய்வு கூடத்தின் கதவை பெரிதாக்கும் பணிகளை ஆரம்பித்தோம். கடந்த இரண்டு நாள்களாகப் பல்கலைக்கழகத்தில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காகவே பல்கலைக்கழகத்தில் சோதனை நடவடிக்கைகளை இரண்டு நாள்கள் நிறுத்தியிருந்தோம். இன்றிலிருந்து சோதனைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளோம். ஆனால் ஒரு சில ஊடகங்கள் ஆய்வுகூடத்தில் தொற்றுப் பரவியமை காரணமாக சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வதந்திகளைப் பரப்பியுள்ளனர். எமது ஆய்வுகூடத்தில் எந்தவொரு தொற்றும் ஏற்படவில்லை. நூறு வீதம் பாதுகாப்பாகவே முன்னெடுக்கப்படுகின்றது. எமது ஆய்வுகூடத்தில் சோதனை செய்பவர்கள் தங்களுக்கு தொற்று ஏற்பட விரும்புவார்களா? அல்லது யாராவது விரும்புவார்களா? எல்லா விடயங்களும் பாதுகாப்பாகவே நடக்கின்றன. இப்படி வதந்திகளைப் பரப்புவதன் காரணமாக பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று எல்லோரும் பயப்படுவார்கள். தயவுகூர்ந்து பொய்யான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டாம், என்றார். வதந்திகளைப் பரப்பி ஒரு சிலர் பிழையான நோக்கோடு செயற்படுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி குறிப்பிட்டார். (ஓ,5)

## சுதந்திரக் கட்சி....

இன்று மதியம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ' குறித்த பெண் எமது கிராமத்தில் 22 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி வழங்கினார். தனக்கு அறிமுகமான ஓர் இணைய ஊடகத்தையும் அழைத்து வந்தார். அவர் அந்த ஊடகத்துக்கு கருத்து தெரிவித்தார். எமது கிராமத்தைப் பற்றி தரக்குறைவாக அவர் கருத்து வெளியிட்டார். எமது பெண்கள் குடும்பத்துக்கு கட்டுப்படாதவர்கள் என்றும் குறிப்பிட்டார். இந்தக் கிராமத்தில் 56 குடும்பங்கள் வசிக்கின்றன. ஓ.எல். பரீட்சைக்குத் தோற்றிய 5 பேர் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். பல்கலைக்கழக அனுமதி கிடைத்த ஒருவரும் உள்ளார். அரச வேலை வாய்ப்பை பெற்ற 17 குடும்பங்களும் உள்ளன. எமது கிராமத்தை விற்று அவர்கள் வாக்குச் சேகரிக்கக் கூடாது. அதற்காகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது' என்று போராட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர். (ஓ,5,105)

# பட்டதாரி பயிலுநருக்கு தொடர்கின்றது அநீதி

## முன்னாள் எம்.பி. இம்ரான் மஹரூப் குற்றச்சாட்டு

மூதூர், மே 6

கடந்த மார்ச் மாதம் பட்டதாரிகளாக நியமனம் பெற்றவர்களுக்குத் தொடர்ச்சியாக அநீதி இழைக்கப்பட்டு வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் நியமனம் வழங்க முடியாது எனத் தெரிந்தும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டது. பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்க வேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்துக்கு இருப்பின் நாடாளுமன்றம் கலைக்கப்பட முன்னர் நியமனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது நியமனம் வழங்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். அதன்பின் இவர்களின் பயிற்சி தேர்தல் ஆணையாளரால் இடைநிறுத்தப்பட்ட போது பட்டதாரிகளை



வீட்டில் வைத்தே அவர்களுக்கான சம்பளத்தை வழங்குவோம் எனப் பிரதமர் கூறினார். அதேபோல் அவர்களுக்கான மார்ச் மாதக் கொடுப்பனவு வழங்கப்படும் என ஜனாதிபதி கூறினார். ஆனால் எதுவித கொடுப்பனவும் அந்த மாதம் வழங்கப்படவில்லை.

அதன்பின் கொரோனா தடுப்பு பணிகளுக்காக பட்டதாரிகளை இணைத்து கொள்வதாகக் கூறினர். அதன்பின் தேர்தல் ஆணையாளர் அவ்வாறு அவர்களை பணியில் அமர்த்த முடியாது எனக் கூறியதாக கூறி அதையும் நிறுத்தினர். கடந்த வாரமளவில் பட்டதாரிகளுக்கு இருபதாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறி அதையும் தேர்தல் ஆணையாளர் இடைநிறுத்தியுள்ளதால் வழங்க முடியாது என இப்போது கூறுகின்றனர்.

இவ்வாறு பயிற்சி வழங்குகிறோம், கொடுப்பனவு வழங்குகிறோம் என அரசாங்கம் கூறுவதும், தேர்தல் ஆணையாளர் அதை இடைநிறுத்துவதுமாக மாறி மாறி நடப்பதில் பாதிக்கப்படுவது பட்டதாரிகளே. அரசாங்கத்தினால் வழங்கும் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும்போது அதை இடைநிறுத்தாத தேர்தல் ஆணையாளர் பட்டதாரிகள் விடயத்தில் மட்டும் இவ்வாறு நடந்துகொள்வது வேதனை அளிக்கிறது. இவ்வாறு பட்டதாரிகளாக நியமனம் பெற்ற பலர் இந்த வேலையை நம்பி தாம் முன்னர் செய்த வேலைகளை விட்டவர்கள். செய்த வேலையும் இல்லாமல் இந்த வேலையும் இல்லாமல் இந்த சமயத்தில் வருமானத்துக்கு பல சிரமங்களை எதிர்கொள்வதாக பட்டதாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே பட்டதாரிகளுக்கு நியாயமான தீர்வொன்றைப் பெற்று கொடுக்குமாறு அரசாங்கத்திடம் பட்டதாரிகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் நாம் தயாராக உள்ளோம் -என்றார். (ப-40)

# மணல் அகழ்வு; இருவர் கைது

கிளிநொச்சி, மே 6

அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்து ஏற்றினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் இரு டிப்பர் வாகனங்களும், உழவியந்திரம் ஒன்றும், கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மங்கேணிப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே போல் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் புலோப்பளை காற்றாடிப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றிய உழவியந்திரம் கைப்பற்றப்பட்டதுடன், அதன் சாரதி கைது செய்யப்பட்டார். ஊரடங்கு நேரத்தில் வெளியில் சென்றமை மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றியமை ஆகிய குற்றசாட்டுகளில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ப-6)

# சஞ்சீவி மரத் தடிகளை வெட்டிய ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 6

அனுமதியின்றி காட்டுக்குள் நுழைந்து 250 சஞ்சீவி மரத்தடிகளை வெட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யபப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் பயணித்த வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வண்ணாங்கேணியில் உள்ள சஞ்சீவி காட்டுப்பகுதியில் குறித்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. அந்தக் காட்டுக்குள் வாகனத்துடன் உள்நுழைந்து சுமார் 250 சஞ்சீவி மரத்தடிகளை வெட்டினார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (ப-6)




# ஓய்வூதியம் வழங்கல்

முல்லைத்தீவு, மே 6

முல்லைத்தீவு, மாவட்டத்தில் அரச ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகள் நேற்று மாவட்டத்திலுள்ள சகல வங்கிகளிலும் நடைபெற்றது.

இராணுவம், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

ஓய்வூதியவர்களுக்கான போக்குவரத்து வசதிகளையும் ஏனைய வசதிகளையும், இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர். (ஐ-70,222)

# பேராசிரியருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் பவளவிழா அகவை நாளை முன்னிட்டு அவர் நேற்று கௌரவிக்கப்பட்டார். பேராசிரியரின் அன்பர்கள் சிலர் அவரது வீட்டுக்குச் சென்று அவரையும் அவரது துணைவி சரஸ்வதி சிவலிங்கராஜாவையும் வாழ்த்தினர்.

இதன்போது செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், கவிஞர் சோ. பத்மநாதன், செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் மற்றும் விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் உடனிருந்து வாழ்த்தினர். (ஐ)

# 17 வயதுச் சிறுவன் கஞ்சாவுடன் கைது

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மே 6

கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 17 வயது சிறுவன் ஒருவர் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று அந்தச் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சோதனைகளை மேற்கொண்ட பொலிஸார், அவனிடமிருந்து 5 கிராம் கஞ்சாவைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணையின் பின்னர் சிறுவன் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன. (ப-6)



# கொழும்பில் இறந்த பெண்ணுக்கு கொரோனா தொற்றியது எப்படி?

*இன்னும் தெரியவில்லை என்கிறார் சவேந்திர சில்வா*

கொழும்பு, மே 6

கொழும்பு 15, மோதரைப் பகுதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த பெண்ணுக்கு எவ்வாறு கொரோனா தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லையெனத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அது குறித்து தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

கொழும்பு 15, முகத்துவாரம் மெத்சந்த செவன தொடர்மாடி குடியிருப்பில் வசிக்கும் 5 பிள்ளைகளின் தாயொருவர், மூச்சுத் திணறல் காரணமாகக் கடந்த திங்கட்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு பி.சி.ஆர். எனும் கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பரிசோதனைகள்




முன்னெடுக்கப்பட்டன. அவருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. உடனடியாக அவர் அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், பெண்ணின் நிலை தீவிரமாக இருந்தது. உடனடியாகவே தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில், நேற்று காலை அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே இராணுவத்தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். கொரோனா தொற்றுக்கு இலக்காகி நேற்று உயிரிழந்த பெண்ணுக்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது?, யாரால் தொற்றுக்குள்ளானது என்பது பற்றி இதுவரை கண்டறியப்படவில்லை. எப்படியாயினும் அதனை ஆராய்ந்து கண்டறிவோம் என்று தெரிவித்த இராணுவத் தளபதி இதேவேளை, நேற்று கொரானா தொற்றுக்குள்ளான 20 பேரில் 15 பேர் இலங்கைக் கடற்படை வீரர்கள். இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்கள் 771 பேரில் 348 பேர் கடற்படை வீரர்கள் என்றும் தெரிவித்தார். (ப)




## வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மே 6

வீதியில் சென்றவரை அந்த வழியாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று மீசாலை வடக்கில் இடம்பெற்றது.

அதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 30 வயதுடைய குடும்பத் தலைவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் . (ஐ-9)

## தனிமைப்படுத்தல் நிறைவு; ஊர் திரும்பும் 226 மாணவர்

கொழும்பு, மே 6

பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கை மாணவர் குழுவினர் உட்பட 226 பேர் கட்டாய தனிமைப்படுத்தல் நடைமுறைகளை வெற்றிகரமாக முடித்துள்ள நிலையில் அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாடு முழுவதும் 39 சிறப்பு தனிமைப்படுத்தல் நிலையங்களில் மொத்தமாக 4,882 பேர் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக கொவிட் 19 எதிர்பாரா பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும், பாதுகாப்பு தலைமை பிரதானியும், இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். அத்துடன் இதுவரை மொத்தமாக 5,136 நபர்கள் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ப)

## நிவாரணம் வழங்குங்கள்

*முன்னாள் சபாநாயகர் கரு இவ்வாறு சுட்டிக்காட்டல்*

கொழும்பு, மே 6

தற்போதைய நெருக்கடியைக் குறைப்பதற்காக மிகவும் வறிய மக்களுக்கு எவ்வித அரசியல் பாகுபாடின்றி நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் . இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு பெரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் முன்னாள் சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் பகுதிகளில் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படுகின்றார்கள். அதேவேளை தற்போதைய நெருக்கடியைக் குறைப்பதற்கு மிகவும் வறிய மக்களுக்கு எவ்வித அரசியல் பாகுபாடுமின்றி நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அதேநேரம் கைத்தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமாகும் - என்றார். (ம)



## மாலையில் கடும் மழை பெய்யலாம்

கொழும்பு, மே 6

அடுத்த சில நாள்களுக்கு நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, வடமேல், தென், ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை, மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென் மற்றும் மேல் மாகாணங்களிலும் புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ப)

## ஆசிரியர்கள் பதிவு செய்யவும்

கிளிநொச்சி,மே 6

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு நிதிப் பங்களிப்பை வழங்க கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்வந்துள்ளது.

இதற்கமைய பாடசாலை ஆசிரியர்களின் மே மாத சம்பளத்தில் இருந்து ஒரு நாள் சம்பளத் தொகையை கொரோனா நிதிப் பங்களிப்பாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சம்மதம் தெரிவிக்கின்ற ஆசிரியர்கள் தமது விவரங்களை 0767765679 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நாளை 8 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு பாடசாலை அதிபர் கி.விக்னராஜா அறிவித்துள்ளார்.(ஐ-159)

## வெசாக்கை முன்னிட்டு முத்திரைகள் வெளியீடு

கொழும்பு, மே 6

இவ் ஆண்டின் வெசாக் பண்டிகையை முன்னிட்டு, மூன்று நினைவு முத்திரைகளை வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முத்திரைகள் வெளியிடும் நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையின் அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது.

அதன்படி தபால் திணைக்களம் 10, 15 மற்றும் 45 ரூபா பெறுமதியுடைய முத்திரைகளையே இவ்வாறு வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளது. இன்றும், நாளையும், வெசாக் பௌர்ணமி தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 4 ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி வெசாக் வாரமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ப)

# தப்பிக்க கடலில் பாய்ந்த இளைஞன் சடலமாக மீட்பு

மூதூர், மே 6

சட்டவிரோதமாக மணல் ஏற்றிக் கொண்டிருந்த இருவரில் ஒருவர் தப்பிப்பதற்காக கடலில் பாய்ந்த நிலையில் காணாமல்போய், பின்னர் சடலமாக மீட்கப்பட்டார். மணல் ஏற்றிக்கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் சத்தத்தை கேட்டு, வருபவர்கள் பொலிஸார் எனக் கருதி குறித்த இளைஞன் கடலில் பாய்ந்தான் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோலை வெட்டுவான் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

கிண்ணியா 03 மதினா நகர் யுனைதீன் பாஹீம் (வயது 21) என்னும் இளைஞனே இவ்வாறு காணாமல் போய், இரவு நீரேந்து பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

இளைஞன் காணாமல் போன போது, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும், கடற்படையினரும் கடலில், தேடுதல் மேற்கொண்டனர் எனினும் இளைஞன் சிக்கவில்லை. அன்றையதினம் இரவு சடலமாக மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-40)



# பிரதமர் மஹிந்தவை சந்தித்த அமெரிக்கத் தூதர் அலைனா!

கொழும்பு, மே 6

அமெரிக்கத் தூதர் அலைனா டெப்லிட்ஸ் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். இதன்போது இருநாடுகளிலும் எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல், கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடி ஆகிய விடயங்கள் தொடர்பில் பேச்சும் இடம்பெற்றது.

இதுகுறித்து பிரதமர் அலுவலகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸிற்கும் இடையில் இன்றையதினம் (நேற்று) சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு முகங்கொடுத்தல் மற்றும் அதன் பின்னரான பொருளாதார ரீதியான சவாலை எதிர்கொள்ளல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. மேலும் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல்நிலை குறித்துக் கருத்து வெளியிட்ட டெப்லிட்ஸ் 'தற்போது பொது சுகா தாரத்துறை மேம்பாடடைந்து இருப்பதாகவே நம்புகின்றோம். அது தொடர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்' என்று குறிப்பிட்டார் - என்றுள்ளது. (ம)

# மேல் மாகாணத்திலிருந்து 600 பேர் சொந்த ஊருக்கு

கொழும்பு, மே 6

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால், தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாமல் மேல் மாகாணத்தில் சிக்கியுள்ளவர்களில் இரண்டாம் கட்டமாக சுமார் 600 பேர் இன்று அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 23 மாவட்டங்களைச் சேர்ந்த இவர்கள் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் அனுப்பி வைக்கப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். (ப)



# கணவனை கொன்ற மனைவி சரணடைவு!

கொழும்பு, மே 6

ஹாலிஎல பகுதியில் கணவனை கோடரியால் தாக்கிய மனைவி, கணவன் உயிரிழந்ததை அடுத்து பொலிஸில் சரணடைந்துள்ளார்.

ஹாலியெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரங்கல பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், 36 வயதுடைய அவரது மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையிலிருந்த கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் முரண்பாடு தோற்றம் பெற்றுள்ளதுடன், இது மோதலாக மாறியதை அடுத்தே மனைவி தனது கணவனை கோடரியால் தாக்கியுள்ளார். கணவன் உயிரிழந்ததை அறிந்த மனைவி பின்னர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். (ம)

# கொரோனாவை அழிக்கும் கருவிக்கு ரூபா 800 கோடி!

கொழும்பு, மே 6



கொரோனா கிருமித் தொற்றுத் தொடர்பான ஆராய்சிகளை நடத்தி அதற்கான சிகிச்சைகளை அளிப்பதற்கும் அதனைத் தடுப்பதற்கும் தேவையான கருவிகளை உருவாக்குவதற்கு உலகத் தலைவர்கள், சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் 7.4 பில்லியன் யூரோக்களை ( 800 கோடி ) வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர்.

இதனை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் திங்களன்று இணையத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் 40 நாடுகள் கலந்துகொண்டன. இந்தக் கூட்டத்தின்போது திரட்டப்பட்ட தொகை உரிய இலக்கைவிட சற்று குறைவாக இருந்தபோதிலும் அடுத்தவரும் தினங்களில் மேலும் நிதி வழங்குவதற்கான உறுதிப்பாடுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிதி கொவிட் - 19 தடுப்பு நடவடிக்கைகளின் ஆரம்பத் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படும் என உலகத் தலைவர்கள் தெரிவித்தனர்.

நிதியானது தனிச் சிறப்புவாய்ந்த உலகளாவிய ஒத்துழைப்பை ஆரம்பிக்க உதவும்' என ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் ஊர்சுலா வொன் டேர் லெயென் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புக்கான அழைப்பை ஆதரிப்பதாகத் தெரிவித்த உலகத் தலைவர்கள், கொவிட் 19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு மிகவும் அவசியமான கருவிகளை உருவாக்குவற்கான அணுகுமுறைகளை ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டனர்.

அத்துடன் ஆராய்ச்சி, விருத்தி, அணுகல் ஆகியவற்றையும் தடுப்பு மருந்து மற்றும் உயிர்காக்கும் மற்றும் நோயை கண்டறிவதற்கான சிகிச்சை முறைகளையும் விரைவுபடுத்துவதற்கு உலகளாவிய ஒத்துழைப்புக்கான தளம் ஒன்றின் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

'முழு உலகத்துக்காகவும் உலகத்தால் தயாரிக்கப்படும் ஒரு தடுப்பு மருந்தை (தடுப்பூசி) எம்மால் விருத்திசெய்யக் கூடுமானால் அது 21ஆவது நூற்றாண்டில் ஒரு தனித்துவமான பொது நன்மையை பயக்குவதாக அமையும். அந்தத் தடுப்பூசி அனைவருக்கும் இலகுவாக, மலிவு விலையில் கிடைக்கச் செய்வதற்கு எமது பங்காளிகளுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்' என அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# தனிமைப்படுத்தலில் இன்றும் 138 பேர்

கொழும்பு, மே 6

கொலன்னாவை, இராஜகிரிய மற்றும் கண்டி - கொலபிஸ்ஸ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 138 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி இராஜகிரிய பண்டாரநாயக்கபுர பிரதேசத்தில் 29 பேரும் கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 27 பேரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு இன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் கண்டி - கொலபிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். (ப)

# 11 அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே 6

நல்லாட்சி அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட 11 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரச நிர்வாக மற்றும் உள்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

தமது பதவிக்காலத்தில் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வீடுகளை இதுவரையில் கையளிக்காததன் காரணமாக மேற்படி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், குறித்த நபர்களுக்கு இறுதி அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் அவர்கள் அனைவரும் எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# ஆடை உற்பத்தியை மேம்படுத்த அமெரிக்காவை வைத்து வியூகம்

## பிரதமர் மஹிந்த வெளிப்படுத்தினார்

கொழும்பு, மே 6

கொரோனாவில் இருந்து மீண்டதன் பின்னர் ஆடை உற்பத்தித்துறையை மேம்படுத்துவதற்கு அமெரிக்காவை வைத்து இலங்கை வியூகம் வகுத்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அமெ ரிக்கத் தூதவர் அலைனா டெப்லிட்ஸுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த பிரதமர் மஹிந்த, கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர், நாட்டின் ஆடை உற்பத்தித்துறையின் மேம்பாட்டிற்கு அமெரிக்கா ஆதரவு வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அதனை ஏற்றுக்கொண்ட அமெரிக்கத் தூதுவர், இலங்கையின் பல்தேசியக்கம்பனிகள் மற்றும் சிறிய, நடுத்தர ளவு வணிக முயற்சிகள் இந்நெருக்கடியிலிருந்து மீண்டுவருவதைக் காண அமெரிக்கா விரும்புகின்றது- என்று தெரிவித்தார். (ம)





# மரக் கடத்தல்; இருவர் கைது

மட்டக்களப்பு, மே 6

வாழைச்சேனை வட்டார வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஓமடியாமடு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், இரண்டு வாகனங்களும், முதுரை மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை வட்டார வனவள உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

ஓமடியாமடு காட்டுப்பகுதியில் இன்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே குறித்த சம்பவம் கண்டறியப்பட்டு, இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். எட்டு அடி நீளம் மதிக்கத்தக்க ஒன்றரை லட்சம் பெறுமதியான பதின்மூன்று முதுரை மரக் குற்றிகளும், இரண்டு சிறிய ரக வாகனங்களும் கைப்பற்றப்பட்டன என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார். (ப-150)

### கொரோனாவால் இறந்த

# பெண்ணின் கணவர் பேக்கரி உணவுகள் விற்பனையாளர்

கொழும்பு, மே 6

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்த பெண்ணின் கணவர் முச்சக்கர வண்டியில் பேக்கரி உணவுகள் விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இதுவரையில் கொரோனா நோயாளிகள் பதிவாகாத கொழும்பின் 4 இடங்களில் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மோதர மெத்சத வீட்டுத் தொகுதியில் பதிவாகிய பெண் ஒருவர் ஐ.டி.எச் வைத்திய சாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார். அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது எவ்வாறு என்ற விசாரணைகள் நடைபெறும் நிலையில் அவருடைய கணவர் முச்சக்கர வண்டியில் பேக்கரி உணவுகள் விற்பனை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# அபிவிருத்தி வேலைகள் முடிந்தும் இதுவரை நிதி கிடைக்கவில்லை

### மன்னார் தவிசாளர் ஜனாதிபதிக்கு கடிதம்

மன்னார், மே 6

மன்னாரில் கடந்த ஆண்டு (2019) மன்னார் மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கும்படி பணிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டும் அதற்கான நிதி இன்னும் ஒப்பந்தக்காரர்களுக்கு கிடைக்கவில்லையென தெரிவித்து மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

மன்னார் மாவட்டம் போரால் பாதிப்படைந்த ஒரு பிரதேசம். இதை கட்டியெழுப்பப்பட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அரசியல்வாதிகளுக்கும் இருக்கின்றது. இதற்கமைய கடந்த ஆண்டு 2019 இவ் பிரதேசத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை கிராம மட்டத்தில் முன்னெடுக்கும்படி பணிக்கப்பட்டிருந்தோம். மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் எங்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க கடந்த ஆண்டு நாங்கள் கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம்.

அதுவும் கடந்த ஆண்டு பத்தாம் மாதம் இவ் வேலைத் திட்டங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் நாங்கள் பணிக்கப்பட்டிருந்தோம். இதற்கமைய பல கிராமிய அமைப்புக்கள் பல சிரமத்தின் மத்தியில் இவ் வேலைத்திட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளனர்.

கடன்பட்டு தங்கள் நகைகளை வங்கிகளில் அடகு வைத்தே இவ் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளனர். இதற்கமைய கடந்த ஆண்டு (2019) மன்னார் பிரதேச சபை உட்பட நகர சபை மற்றும் மன்னார் மாவட்ட பிரதேச சபைகளில் 50 அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் 172 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றது. செலவழிக்கப்பட்ட இதற்கான நிதிகளை வழங்கும்படி பிரதேச செயலகத்தினூடாக மன்னார் மாவட்டச் செயலருக்கு விண்ணபிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான நிதி இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் இருப்பதால் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்- என்றுள்ளது. (ப-60)

## கடற்படையினரை...

சவேந்திர சில்வா தெரிவித்தார். இவர்களில் ஒருவர் குணமடைந்துள்ளார் எனவும், 135 பேர் வெலிசறை கடற்படை முகாமிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், ஏனையோர் கொரோனா சிகிச்சை நிலையங்கள் அமைந்துள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள கடற்படையினரின் குடும்பங்கள் மற்றும் அவருடன் நெருக்கமாகப் பழகியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களைப் புறக்கணிக்கும் வகையில் மக்கள் எவரும் செயற்படக்கூடாது எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ஒ,5,22)

# கழிவுகளாகும் மாஸ்க் சுற்றுச்சூழல் பிரச்சினையாக உருவெடுக்கும்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு சபையின் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 6

கழிவுகளாக அகற்றப்படும் முகக் கவசங்கள், எதிர்காலத்தில் பாரியதொரு சுற்றுச்சூழல் பிரச்சினையாக உருவெடுக்குமென, கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி தர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

குறிப்பாக, தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் முகக் கவசங்கள், பெரும்பாலும் ஒருமுறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டு, அகற்றப்படுகின்றன. இவ்வாறு அகற்றப்படும் முகக் கவசங்களினால் ஏற்படும் பிரச்சினை பாரதூரமானது. தற்போது இவ்வாறு அகற்றப்படும் அதிகளவான முகக் கவசங்கள் ஆங்காங்கே இருப்பதை அவதானிக்க முடிகிறது. அவற்றை சாதாரண குப்பைகளுடன் சேர்த்து அகற்றாது, அவற்றை அகற்ற தனியான முறையை ஏற்படுத்த வேண்டும். வீடுகளில் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படும் முகக் கவசங்களை எரிக்க வேண்டும். அல்லாவிடின், அவற்றை சுகாதாரமான முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இல்லையெனின், சுற்றுச்சூழலில் அகற்றப்பட்ட முகக் கவசங்கள், மழை காலத்தில் நீரோட்டத்துடன் சேர்ந்து கடல் நீரினுள் கலந்து விடுவதற்கான வாய்ப்புக் காணப்படுவதோடு, கடற்கரையோரங்களில் கரையொதுங்கவும் வாய்ப்புக் காணப்படுகின்றது. தற்போது பல ஐரோப்பிய நாடுகளின் கடற்கரையோரங்கள் இதன் காரணமாக நாசமடைந்துள்ளது- என்றார். (ப)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 05.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.